ஹெச்.ராஜாவுக்கு சிறை: உத்தரவு ரத்து

சென்னை, செப். 1: பெரியார், திமுக எம்.பி. கனிமொழி ஆகியோருக்கு எதிராக அவதூறு கருத்துகளைத் தெரிவித்ததாக பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் தமிழக பாஜக மூத்த தலைவர் ஹெச்.ராஜாவுக்கு விதிக்கப்பட்ட 6 மாத சிறைத் தண்டனையை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

பாஜக மூத்த தலைவர் ஹெச்.ராஜா, கடந்த 2018-ஆம் ஆண்டு பெரியார் சிலையை உடைப்பேன் என்றும், திமுக எம்.பி. கனிமொழிக்கு எதிராக அவதூறு கருத்துகளையும் எக்ஸ் தளத்தில் பதிவு செய்திருந்ததாக பல்வேறு காவல் நிலையங்களில் திமுக நிர்வாகிகள், தந்தை பெரியார் திராவிடர் கழகம் உள்ளிட்ட அமைப்புகள் சார்பில் புகார்கள் அளிக்கப்பட்டன.

திமுக எம்.பி. கனிமொழிக்கு எதிராக கருத்து தெரிவித்த புகாரில் ஈரோடு நகர காவல் நிலையத்திலும், பெரியார் சிலை உடைப்பு பேச்சு தொடர்பாக ஈரோடு கருங்கல்பாளையம் காவல் நிலையத்திலும் ஹெச்.ராஜாவுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்த வழக்குகளை ரத்து செய்யக் கோரி ஹெச்.ராஜா தாக்கல் செய்த மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இதையடுத்து, இந்த வழக்குகளை விசாரித்த சென்னையில் உள்ள எம்.பி., எம்எல்ஏக்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம், இந்த இரு வழக்குகளிலும் தனித்தனியாக 6 மாதங்கள் சிறைத் தண்டனையும், ரூ.10,000 அபராதம் விதித்தும் தீர்ப்பளித்தது. சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக ஹெச்.ராஜா சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கில் நீதிபதி வி.லட்சுமிநாராயணன் செவ்வாய்க்கிழமை பிறப்பித்த தீர்ப்பில், ஹெச்.ராஜாவின் பதிவுகளால் சமூகத்தில் பதற்றம் ஏற்பட்டதற்கு எந்த ஆதாரமும் இல்லை எனக் கூறி, இரு வழக்குகளிலும் தண்டனை விதித்து பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பை ரத்து செய்து உத்தரவிட்டார்.

மருத்துவக் கல்லூரி முதல்வர்கள் மாற்றம்

சென்னை, செப். 1: தமிழகத்தில் பல்வேறு மருத்துவக் கல்லூரிகள், மருத்துவமனைகளில் முதல்வர்கள், இயக்குநர்கள் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலர் தாரேஸ் அகமது வெளியிட்ட அரசாணை:

டாக்டர் செல்வராஜன் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரியிலிருந்து திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வராகவும், டாக்டர் கலைவாணி புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியிலிருந்து சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரிக்கும், சென்னை ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் டாக்டர் மணி, புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரிக்கும், டாக்டர் ரோகிணி தேவி வேலூர் அரசு மருத்துவக் கல்லூரியிலிருந்து தேனி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வராகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், டாக்டர் முத்து சித்ரா, தேனி அரசு மருத்துவக் கல்லூரியிலிருந்து வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வராகவும், டாக்டர் ஜெயசிங், விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரியிலிருந்து கோவை அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் இஎஸ்ஐசி மருத்துவமனை முதல்வராகவும், டாக்டர் அமுது ராணி, ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரியிலிருந்து விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வராகவும், டாக்டர் மோகன் காந்தி திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரியிலிருந்து நாகப்பட்டினம் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வராகவும் மாற்றப்பட்டுள்ளனர்.

மேலும் பதவி உயர்வு வழங்கப்பட்டு டாக்டர் கண்ணன், சென்னை ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநராகவும், டாக்டர் செல்வாம்பிகை, ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வராகவும், டாக்டர் எட்வினா வசந்தா, திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி முதல்வராகவும், டாக்டர் பாலாஜி திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வராகவும், டாக்டர் செந்தில்குமார், ஈரோடு பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜிநாமாவை திரும்பப் பெறக் கோரும்

இசக்கி சுப்பையா மனுவை ஏற்க உயர்நீதிமன்றம் மறுப்பு

சென்னை, செப். 1: ராஜிநாமாவை திரும்பப் பெறவும், எம்எல்ஏவாக தொடர அனுமதிக்கக் கோரியும் முன்னாள் அதிமுக எம்எல்ஏ இசக்கி சுப்பையா தாக்கல் செய்த கூடுதல் மனுவை விசாரணைக்கு ஏற்க சென்னை உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது.

சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 6 எம்எல்ஏக்களின் ராஜிநாமாவை ஏற்று பேரவைத் தலைவர் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக அந்தக் கட்சியின் கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கை, தேதி குறிப்பிடாமல் தீர்ப்புக்காக ஒத்திவைத்துள்ளது.

இந்த வழக்கு விசாரணையின்போது, ராஜிநாமாவை திரும்பப் பெறுவதாகவும், சட்டப்பேரவை உறுப்பினர் இல்லாததால் தனது தொகுதி மக்கள் பாதிக்கப்படுவதால், இடைத்தேர்தல் தொடர்பான வழக்கின் இறுதி தீர்ப்பு வரும்வரை அம்பாசமுத்திரம் சட்டப்பேரவை உறுப்பினராகப் பணிபுரிய அனுமதிக்க வேண்டும் எனவும் பேரவைத் தலைவரிடம் கடந்த ஆக. 28-ஆம் தேதி கடிதம் அளித்துள்ளதாகக் கூறி, இசக்கி சுப்பையா தரப்பில் கூடுதல் மனு தாக்கல் செய்யவுள்ளதாக நீதிபதிகளிடம் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கூடுதல் மனுவை விசாரணைக்கு ஏற்க தலைமை நீதிபதி அமர்வு திட்டவட்டமாக மறுத்துவிட்டது.

பேரவைச் செயலரிடம் கடிதம்: இதற்கிடையே, இசக்கி சுப்பையா சட்டப்பேரவைச் செயலரிடம் தனது ராஜிநாமா கடிதத்தைத் திரும்பப் பெற கடிதம் அளித்துள்ளார். இந்தக் கடிதத்தை ஏற்பதற்கு சட்டத்தில் இடமில்லை என்பதால் அவரது கோரிக்கை நிராகரிக்கப்படும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. இசக்கி சுப்பையாவின் ராஜிநாமா ஏற்கப்பட்டு அந்தத் தொகுதி காலியானதாக அரசிதழில் அறிவிக்கப்பட்டுவிட்டது. இதனால் இடைத்தேர்தல் மட்டுமே தீர்வாகும் என சட்டப்பேரவை செயலர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பூலித்தேவன் பிறந்த தினம்

குடியரசு துணைத் தலைவர், ஆளுநர், முதல்வர் மரியாதை

சென்னை, செப். 1: விடுதலைப் போருக்கு வித்திட்ட பூலித்தேவனின் பிறந்த தினத்தையொட்டி, அவருக்கு குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர், முதல்வர் ஜோசப் விஜய் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் புகழாரம் சூட்டி மரியாதை செலுத்தியுள்ளனர்.

குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன்: அஞ்சா நெஞ்சத்துடனும் தளராத விடுதலை வேட்கையுடனும் அந்நிய ஆட்சிக்கு எதிராகப் போராடிய மாவீரர் பூலித்தேவனின் பிறந்த தினத்தில் எனது மரியாதையைச் செலுத்துகிறேன். எதிரிகளை நடுங்கச் செய்த அவரது துணிவும் வீரமும் தாய்நாட்டின் மீதான அளப்பரிய பற்றும், தியாகம் நிறைந்த போராட்ட வாழ்வும் நமது விடுதலைப் போராட்ட வரலாற்றிலும், நமது நெஞ்சங்களிலும் என்றும் நிலைத்து நிற்கும்.

ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர்: சித்திரபுத்திரத் தேவர் சிவஞான நாச்சியாரின் சீர்மிகு புத்திரன் காத்தப்பதுரை, பேருக்கேற்றாற் போல் புலியைக் கொன்று பூர்வகுடிகளைக் காத்ததால் பூலித்தேவன் ஆனான். கிழக்கிந்திய கம்பெனிப் படையை முதல்முதலில் விரட்டியடித்து விடுதலைப் போருக்கு வித்திட்ட பூலித்தேவனின் புகழைக் கூறுவோம்.

முதல்வர் ஜோசப் விஜய்: ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துக்கு எதிராகத் தமிழக மண்ணில் முதல் இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கு முன்னதாகவே துணிச்சலுடன் களம் கண்ட விடுதலைப் போராட்ட வீரரும், நெற்கட்டும்செவல் பாளையக்காரருமான மாவீரன் பூலித்தேவனின் பிறந்த நாளில், அவரைப் போற்றிப் பெருமிதத்துடன் நினைவுகூர்கிறேன். தாய்நாட்டு விடுதலைக்காக தன்னலமின்றிப் போராடிய அவரின் புகழ் என்றும் நிலைத்திருக்கட்டும்.

மு.க.ஸ்டாலின் (திமுக): தன்னலத்தை விடுத்து தமிழ் நிலத்தின் தன்மானமே பெரிதெனக் கருதி ஏகாதிபத்திய எதிர்ப்புக் களத்தில் போரிட்ட மாவீரர் பூலித்தேவனுக்கு என் புகழ் வணக்கத்தை உரித்தாக்குகிறேன்.

எடப்பாடி கே.பழனிசாமி (அதிமுக): போர்க்களத்தில் வீழ்த்தவே முடியாத தீரராகத் திகழ்ந்து, வீரத்தில் மட்டுமல்லாமல் இறைப்பணியிலும் சிறந்து விளங்கிய மாமன்னர் பூலித்தேவன் பிறந்த நாளில் அவரின் வீரத்தையும் தியாகத்தையும் போற்றி வணங்குகிறேன்.

இதேபோல், தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் ப.மாணிக்கம் தாகூர், தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், அமமுக பொதுச் செயலாளர் டிடிவி.தினகரன் உள்ளிட்டோரும் புகழாரம் சூட்டியுள்ளனர்.

தண்ணீர்த் தொட்டிகளில் பெண்ணின் உடல் பாகங்கள்: 3 பேர் கைது

சேலம், செப். 1: சேலம் அரிசிபாளையம் பகுதியில் 4 பவுன் நகைக்காக பெண்ணை துண்டுதுண்டாக வெட்டி தண்ணீர்த் தொட்டிகளில் வீசப்பட்ட சம்பவத்தில், காதலர்கள் உள்பட 3 பேரை போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

சேலம் அரிசிபாளையம், குணபாலன் ராமசாமி தெருவைச் சேர்ந்தவர் பூசாரி ரமேஷ். இவரது வீட்டின் மொட்டை மாடியில் உள்ள குடிநீர்த்தொட்டியில் பெண்ணின் உடல் பாகங்கள் கண்டெடுக்கப்பட்டன. இதுகுறித்து பள்ளப்பட்டி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். கொலையான பெண்ணின் கையில் ராஜேந்திரன், கணபதி என பச்சை குத்தப்பட்டிருந்தது.

விசாரணையில், அந்தப் பெண் அயோத்தியாப்பட்டணம் மேட்டுப்பட்டி தாதனூரைச் சேர்ந்த ஜீவானந்தத்தின் மனைவி தங்கமணி (55) என்பது தெரியவந்தது. அதைத் தொடர்ந்து, ஜீவானந்தத்திடம் நடத்தப்பட்ட விசாரணையில், தனது மனைவி கையில் ராஜேந்திரன், கணபதி என பச்சை குத்தியிருந்ததாகவும், சங்கர் நகர், அரிசிபாளையம் பகுதியில் உள்ள வீடுகளில் வேலை செய்துவந்ததாகவும், கடந்த 28-ஆம் தேதி வேலைக்கு சென்றவர் வீடுதிரும்பவில்லை எனவும் போலீஸாரிடம் தெரிவித்தார்.

இதையடுத்து, கொலையாளிகளைப் பிடிக்க மாநகர காவல் உதவி ஆணையர்கள் ரமலி ராமலட்சுமி, அஸ்வினி, முரளி தலைமையில் காவல் ஆய்வாளர்கள் சந்திரமோகன், மணிவண்ணன், கிருஷ்ணமூர்த்தி குழுவினர் விசாரணை நடத்தினர். அதில், கடந்த 28-ஆம் தேதி தங்கமணி கைப்பேசியில் தொடர்புகொண்டு பேசிய நபர்களின் பட்டியலை வைத்து முதல்கட்ட விசாரணையை தொடங்கினர்.

அதில், மேட்டுப்பட்டி தாதனூரைச் சேர்ந்த இளம்பெண் தங்கமணியுடன் தொடர்புகொண்டு பேசியது தெரியவந்தது. அவரிடம் போலீஸார் விசாரணை நடத்தியதில், இளம்பெண்ணும், அவரது காதலன் மற்றும் கூட்டாளி சேர்ந்து சமையல் வேலை வாங்கித் தருவதாக தங்கமணியை அரிசிபாளையத்துக்கு வரவழைத்து, அவர் அணிந்திருந்த நான்கு பவுன் தங்க நகைக்காக கொலை செய்து, உடல்களை துண்டுதுண்டாக வெட்டி குடிநீர்த் தொட்டிக்குள் வீசியது தெரியவந்தது.

இதையடுத்து, இந்த கொலையில் தொடர்புடைய சுக்கம்பட்டியைச் சேர்ந்த நந்தினி (28), அழகாபுரத்தைச் சேர்ந்த மாலிக் பாட்ஷா (27), குரங்குச்சாவடியைச் சேர்ந்த சிவராமன் (29) ஆகிய 3 பேரை போலீஸார் கைது செய்தனர். மேலும், தங்கமணியின் உடை மற்றும் கொலை செய்ய பயன்படுத்திய கத்தியை குடிநீர்த் தொட்டியின் அடியில் இருந்து போலீஸார் கைப்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர்.

V.O.CHIDAMBARANAR PORT AUTHORITY
Marine Department, Tuticorin - 628004

No.MAR-ESTAOCODE(ENBN)/1/2026-Marine. Date: 02/09/2026

Walk-in-Interview
Engagement of Five (05) Trainee Pilots on a Contractual basis

Applications are invited from eligible Indian Nationals for engagement of Five (05) Trainee Pilots on a contractual basis in V.O.Chidambaranar Port Authority, Tuticorin. Candidates possessing the prescribed qualifications and experience may send their applications by email and attend the walk-in interview every Friday at the Office of the Deputy Conservator, V.O.Chidambaranar Port Authority, Harbour Estate, Tuticorin - 628004, along with their original certificates and one set of self-attested copies of relevant documents.

For more details, visit VOC Port's website at www.vocport.gov.in (Careers).

The vacancy notification will remain on the Port Authority's website, and walk-in interviews will continue until all the notified vacancies are filled.

Sd/-
Deputy Conservator

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

ஒப்பந்தப்புள்ளி அழைப்பு – (தகுதி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மற்றும் இரு உறைகள் முறை) – மின்னணு ஒப்பந்த முறையில் அழைப்பு) (குறுகிய கால அழைப்பு)

ஒப்பந்தப்புள்ளி கேட்பு எண்.	01/கோ.ஒப்பந்தப்புள்ளி/வ.சி.இ/2026/நாள்: 27.08.2026 (2 ஆவது அழைப்பு)
நிதி	SDRF
ஒப்பந்தக்காரர் தகுதி	முதல் வகுப்பு ஒப்பந்தக்காரர்கள் (சிவில்)
ஒப்பந்தப்புள்ளி வரவேற்பவர்	மேற்பார்வைப் பொறியாளர், த.கு.வ.வாரியம், சி.இரா. மற்றும் தி.பரா.வட்டம், ஒருங்கிணைந்த த.கு.வ.வாரிய அலுவலக வளாகம், அஞ்சர்–பனங்காடி ரோடு, சிவகங்கை – 630561.
ஒப்பந்தப்புள்ளி படிவம் பதிவிறக்கம்	03.09.2026 முதல் 10.09.2026 – 15.00 மணி வரை
ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத்தொகை	Online or e-BG முறையில் இணையதளம் https://tntenders.gov.in மூலமாக
ஒப்பந்தப்புள்ளி முன் ஆய்வுக்கூட்டம்	07.09.2026 அன்று 11.30 மணிக்கு ஒப்பந்தப்புள்ளி வரவேற்பவர் அலுவலகம்
ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்	10.09.2026 அன்று 15.00 மணிக்குள் மின்னணு ஒப்பந்த முறையில் புதிப்பட்ட ஒப்பம் இடப்பட்டு இணையதளம் https://tntenders.gov.in மூலமாக
ஒப்பந்தப்புள்ளி திறப்பு	11.09.2026 அன்று 15.30 மணிக்கு த.கு.வ.வாரிய மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், சிவகங்கை இணையதளம் https://tntenders.gov.in மூலமாக

ஒ.கே. எண்	திட்டத்தின் பெயர்	பணியின் உத்தேச மதிப்பு (ச.ம.சேவரி 18% உட்பட)	முன்வைப்பு தொகை
2026–2027 ஆம் ஆண்டிற்கான SDRF நிதியின் கீழ்			
01.	இராமநாதபுரம் மாவட்டம் தொண்டி–திருவாடானை மற்றும் பிற 46 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்டத்திற்கான ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல் மற்றும் அதனைச் சார்ந்த பணிகள்.	ரூ.86.09 இலட்சம்	ரூ. 50,000/-

செ.ம.தொ.இ/2729 /ஒப்பந்தப்புள்ளி/2026
மேற்பார்வைப் பொறியாளர், த.கு.வ.வாரியம், சி.இரா. மற்றும் தி.பரா.வட்டம், சிவகங்கை.

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட்.,

வாசவி கல்லூரி (அஞ்சல்), ஈரோடு - 638 316. கைபேசி எண்: 88836 00200

மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் விற்பனை பிரிவின் வாயிலாக 02 பால் வழித்தடங்களில் ஆவின் முகவர்களுக்கு பால் பாக்கெட் மற்றும் பால் உபபொருட்களை 02 Puffed வாகனங்கள் மூலம் விநியோகம் மேற்கொள்வதற்கான மறு ஒப்பந்தப்பணி. முன் வைப்புத் தொகை ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி காலம் ஒப்பந்த ஆணை வழங்கிய நாள் முதல் இரண்டு ஆண்டுகள் வரை.

ஒப்பந்தம் சம்மதமான விபரங்கள் மற்றும் (02.09.2026 முதல் 16.09.2026 மாலை 5.00 மணி வரை) ஒப்பந்த படிவத்தினை இலவசமாக http://tntenders.gov.in என்ற இணைய வலைதளத்தில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை மின்னணு சமர்ப்பித்தல் (e-submission of e-tender) மூலமாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள்: 16.09.2026 அன்று மாலை 5.00 மணி வரை. தொழில்நுட்பப்புள்ளி (Technical Bid) திறக்கப்படும் நாள்:17.09.2026 முற்பகல் 11.00 மணி. ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக ஏதேனும் மாற்றம் இருப்பின் மேற்கண்ட இணையதளத்தில் மட்டும் பதிவேற்றம் செய்யப்படும்.

வெ.ஆ.எண்.298/செ.ம.தொ.அ/ ஒப்பந்தப்புள்ளி 2026 / ஈரோடு.

பொது மேலாளர்,
ஈரோடு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட்.,

சுவாதீன (POSSESSION) அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் (54/2002) (மேற்படி 'சட்டம்') இங்கு காணும் Arcil-Trust-2026-007' ("Arcil")-ன் டிரஸ்டி என்ற அளவில் செயல்படும் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்-ன் கீழே கையொப்பமிட்டுள்ளவர் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிற படியால், மேற்படி சட்டம் பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும் (மேற்படி 'விதிகள்') தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடன் எண் FEDKVPSTL0477528 தொடர்பாக கடன்தாரர்கள்: ஜெயராஜ் S, திருமதி ஜெயமணி, ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் அவர்களுக்கு 15/09/2025 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை (DEMAND NOTICE) அனுப்பி அது கிடைத்த 60 நாட்களுக்குள் அதில் காணும் 13.08.2025 அன்றுள்ளபடியான மேற்படி கடன் பாக்கியை ரூ.19,94,350.68/- (ரூபாய் பத்தொன்பது லட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து முந்நூற்று ஐம்பது மற்றும் அறுபத்து எட்டு பைசா மட்டும்) மற்றும் 14.08.2025 முதல் தொகை வசூலிக்கப்படும் /செலுத்தப்படும் வரை ஒப்பந்த விகிதத்தில் அமைந்த வட்டி சேர்த்து செலுத்துமாறு கோரியிருந்தார்.

ஆனால், கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால் கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் 13 உட்பிரிவு (4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துகளை 29 ஆகஸ்ட் 2026 அன்று இங்கு கையொப்பமிட்டுள்ளவர் தமது சுவாதீனத்தில் (POSSESSION) எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே, கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் மற்றும் முக்கியமாக பொதுமக்களுக்கு இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ/நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது, ARCIL-க்குச் செலுத்தவேண்டிய 02.07.2026 தேதியில் உள்ளபடியான கடன் பாக்கி ரூ.23,18,714.75/- (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து பதினெட்டாயிரத்து எழுநூற்று பதினான்கு மற்றும் எழுபத்தைந்து பைசா மட்டும்) மற்றும் 03.07.2026 முதல் தொகை வசூலிக்கப்படும் /செலுத்தப்படும் வரை ஒப்பந்த விகிதத்தில் அமைந்த வட்டி, எதிர்பாரா செலவுகள், செலவினங்கள் மற்றும் இதர கட்டணங்கள் சேர்த்து முழுவதுமாக செலுத்தவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

கடனுக்கு ஈடான சொத்துகளை மீட்பது தொடர்பான கால அவகாசம் தொடர்பான மேற்படி சட்டம் பிரிவு 13 உட்பிரிவு (8)-ன் ஷரத்துகளை கவனத்தில் கொள்ளுமாறு கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கடனுக்கு ஈடான சொத்து விவரம் (சொத்து விவரம்)

கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கவுண்டம்பாளையம் சார்-பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலுக்கா, எண் 21, பன்னிமடை கிராமம், S.F.எண்.136/2 புஞ்சை நிலம் ஏக்கர் 2.42 தெற்குப் பகுதியான புஞ்சை நிலம் ஏக்கர் 1.21 மற்றும் S.F எண் 136/1 புஞ்சை நிலம் ஹெக்டேர் 1.47.0 ஏர்ஸ் மற்றும் புஞ்சை ஏக்கர் 1.21 நிலம், பன்னிமடை கிராமப் பஞ்சாயத்து அங்கீகரிக்கப்பட்ட லே அவுட் திட்டத்தின் (ஒப்புதல் எண் 02/2001-2002, தேதி 13.04.2001) 'A' பகுதி மனை எண் A-16 நிலம். இதன் எல்லைகள் மற்றும் அளவீடுகள் பின்வருமாறு: **கிழக்கு:** 'B' பகுதி மனை எண் 9. **மேற்கு:** மனை எண் A-15. **தெற்கு:** 20 அடி அகல கிழக்கு-மேற்கு லே அவுட் சாலை. **வடக்கு:** SF எண் 136/1 பகுதி.

இடம் : தமிழ்நாடு
தேதி : 29/08/2026

ஒம்/-
அதிகாரபூர்வ அலுவலர்
அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்.-க்காக
(Trustee of Arcil-Trust-2026-007)

Arcil அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்.,
CIN-U65999MH2002PLC134884. website: www.arcil.co.in.
பதிவு அலுவலகம்: தி ரூபி, 10-வது தளம், 29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு), மும்பை-400 028. தொ.பே.022 66581300.

சென்னை சூப்பர் கிங்ஸ் கிரிக்கெட் லிமிடெட்

CIN : U74900TN2014PLC098517
பதிவு அலுவலகம் : "தன் பில்டிங்", 827, அண்ணா சாலை, சென்னை - 600 002.
தொலைபேசி : 044-2852 1451.
இணையதளம் : www.chennaisuperkings.com; மின்னஞ்சல் : investor@chennaisuperkings.com

பங்குதாரர்களுக்கான அறிவிப்பு

சென்னை சூப்பர் கிங்ஸ் கிரிக்கெட் லிமிடெட்டின் பனிரெண்டாம் ஆண்டு உறுப்பினர்களுக்கான பொதுக்குழுக் கூட்டம் (AGM) வெள்ளிக்கிழமை, செப்டெம்பர் 25, 2026, காலை 10.25 மணிக்கு (இந்திய நேரம்) 31.08.2026 தேதியிட்ட அறிவிப்பில் காணும் சாதாரண அலுவல்களை மேற்கொள்வதற்காக காணொளி வாயிலாக (VC) அல்லது இதர ஒலி ஒளிக் காட்சி சாதனங்கள் (OAVM) மூலமாக பெருநிறுவனங்களின் விவகாரங்கள் அமைச்சகத்தின் (MCA) செப்டம்பர் 22, 2025ன் தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 03/2025 அனுமதித்தபடி நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது. பனிரெண்டாம் ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்திற்கான அறிவிப்புடன் கூடிய விளக்க அறிக்கை மற்றும் 2026ன் ஆண்டறிக்கை ஆகியன, நிறுவனத்திடமோ, நிறுவனத்தின் பங்கு மாற்று பதிவாளரிடமோ (RTA) அல்லது அவரவர் பங்கு வைப்பாளரிடமோ (DPs) தங்களது மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலமாக 01.09.2026 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய ஆவணங்களை நிறுவனத்தின் இணையதளமான www.chennaisuperkings.com மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்டின் (CDSL) இணையதளமான www.evotingindia.comலிருந்து அணுகவும் / பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். நிறுவனம், பங்குதாரர்களுக்கு மேற்கூறிய ஆவணங்களை, காகித வடிவில் அனுப்பாது. நிறுவனத்தின் 2026ம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை அணுகவேண்டிய தொடுப்பு : https://gallery.chennaisuperkings.com/PROD/INVESTOR_CORNER/DOCUMENT/INVESTOR_CORNER1788255192397df431f_1788255192397.pdf

பனிரெண்டாம் ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்ற வேண்டிய அலுவல்கள் மீதான தீர்மானங்கள் மீது தொலை மின்னணு வாக்குப்பதிவு (Remote e-Voting) மூலமும் மற்றும் பொதுக்குழுக் கூட்டத்தின் போதான மின்னணு வாக்குப்பதிவு (e-Voting) செய்யவும், CDSL மூலமாக உறுப்பினர்களுக்கு திருத்தப்பட்ட கம்பெனிகள் சட்டம் 2013ன், 108ன் பிரிவின்படியும், கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் 20ஆம் விதிப்படியும், MCAவின் சுற்றறிக்கைகளின்படியும் மின்னணு மூலம் வாக்களிக்க வசதியளிக்கப்பட்டுள்ளது. பங்குதாரர்களின் வாக்குரிமை வரம்பு (cut-off) நாளான 18.09.2026 அன்று நிறுவனத்தில் செலுத்தப்பட்ட பங்கு முதலீட்டின் விகிதத்திற்குட்பட்டது. தொலை மின்னணு வாக்குப்பதிவு 22.09.2026 காலை 9.00 மணிக்குத் (இந்திய நேரம்) தொடங்கி 24.09.2026 மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரம்) முடிவடையும். அதன்பின், CDSL தொலை மின்னணு வாக்குரிமைக்கான வசதியை முடக்கிவிடும். வரம்பு நாளான 18.09.2026 அன்று பங்குகளை மின்னணு வடிவிலோ (Demat) அல்லது பத்திர வடிவிலோ (Physical) வைத்துள்ள பங்குதாரர்கள் இக்காலகட்டத்தில் தங்கள் வாக்குகளை தொலை மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களிக்கலாம். பங்குதாரர் தீர்மானங்களின் மீது ஒருமுறை வாக்களித்துவிட்டால் அதை பிறகு மாற்றிக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்.

தொலை மின்னணு மூலம் (Remote e-Voting) பொதுக்குழுக் கூட்டத்திற்கு முன் வாக்களித்த உறுப்பினர்கள் பொதுக்குழுக் கூட்டத்தில் காணொளி வாயிலாக (VC) அல்லது பிற ஒலி ஒளிக் காட்சி சாதனங்கள் (OAVM) வாயிலாக பங்கேற்கலாம். ஆனால், தங்களது வாக்கை மறுபடியும் பொதுக்குழுக் கூட்டத்தின்போது மின்னணு வாயிலாக (e-Voting) வாக்களிக்க உரிமையில்லை.

தொலை மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களிக்காத மற்றும் ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தில் VC/OAVM வசதி மூலம் பங்கேற்கும் (மற்றேதும் வழியில் தடைசெய்யப்படாத) உறுப்பினர்களே, தீர்மானங்கள் மீது பொதுக்குழுக் கூட்டத்தின்போதான மின்னணு மூலம் வாக்களிக்க உரிமையுள்ளவர்.

தமது மின்னஞ்சல் முகவரியை நிறுவனம் / பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் (RTA) / பங்கு வைப்பாளரிடம் (DPs) பதிவு செய்யாத உறுப்பினர்கள் 12-ம் ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தின் அறிவிப்பின் 17-ம் குறிப்பிலுள்ள வழிகாட்டுதல்களின்படி தொலை மின்னணு வாக்குப்பதிவிலோ அல்லது ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தின்போதான மின்னணு வாக்குப்பதிவிலோ வாக்களிக்கலாம்.

ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்திற்கு முன் தொலை மின்னணு வாக்களிக்கவும், VC/OAVM மூலம் கூட்டத்தில் கலந்து கொள்ளவும் மற்றும் பொதுக்குழுக் கூட்டத்தின் போதான மின்னணு வாக்குப்பதிவில் பங்கேற்பதற்கான விரிவான செயல்முறைகள் 12-ம் ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தின் அறிவிப்பின் 17ம் குறிப்பிலும் மற்றும் நிறுவனத்தின் இணையதளமான www.chennaisuperkings.comலும் விளக்கப்பட்டுள்ளன.

உறுப்பினர்கள், தொலை மின்னணு வாக்குப்பதிவு அல்லது மின்னணு வாக்குப்பதிவின் மீதான விவரங்கள் அல்லது கேள்விகளுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட 12-வது ஆண்டு பொதுக்குழுக் கூட்ட அறிவிப்பின் 17ம் குறிப்பிலுள்ள அறிவுறுத்தல்களையோ அல்லது திரு.R.கல்யாணராமன், துணை பொது மேலாளர், இன்டகிரேட்டட் ரிஜிஸ்ட்ரி மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (RTA), தொலைபேசி எண் : 044-28140801 - 28140803, மின்னஞ்சல்: einward@integratedindia.in, அல்லது திரு. ராகேஷ் தல்வி, கட்டணமில்லா தொலைபேசி எண்ணான : 1800-21-099-11 மின்னஞ்சல் : helpdesk.evoting@cdslindia.com அல்லது திரு.S.ஸ்ரீராம், தொலைபேசி எண் : 044 2852 1451, மின்னஞ்சல் : investor@chennaisuperkings.comகோ தங்களது DP and Client ID / ஃபோலியோ எண்ணைக் குறிப்பிட்டு வேண்டுகோள் மூலம் விவரம் பெறலாம்.

பொதுக்குழுக் கூட்டத்திற்கான அறிவிப்பை அனுப்பியபின் உறுப்பினரானவர் மற்றும் வரம்பு நாளான 18.09.2026 அன்று பங்குகளை வைத்திருப்பவர்கள் தமது DP and Client IDயை குறிப்பிட்டு தங்களது புகுபதிகை அடையாளத்தையும் (Login ID) மற்றும் கடவுச் சொல்லையும் (Password) மின்னஞ்சல் மூலம் investor@chennaisuperkings.com அல்லது einward@integratedindia.in அல்லது helpdesk.evoting@cdslindia.comல் கேட்டு பெறலாம். எனினும், நீங்கள் ஏற்கனவே தொலை மின்னணு வாக்குப் பதிவிற்காக CDSLலிடம் பதிவு செய்திருந்தால், நீங்கள் தற்போதுள்ள உங்கள் உபயோகிப்பாளர் எண் (User ID) மற்றும் கடவுச் சொல்லையும் (Password) பயன்படுத்தி வாக்களிக்கலாம். தங்களின் ஆரம்ப கடவுச் சொல்லை மீட்டெடுக்க இயலாவிடில் அல்லது மறந்து விட்டிருந்தால், AGM அறிவிப்பின் 17-ம் குறிப்பு எண்ணில் காணும் அறிவுறுத்தல்களை காணவும். உறுப்பினர்கள் OTP-ஐ அடிப்படையாகக் கொண்ட CDSL-ன் மின்னணு வாக்கமைப்பின் மூலமும் வாக்களிக்கலாம்.

வரம்பு நாளன்று உறுப்பினர் பதிவேடு அல்லது பங்கு வைப்பாளர்களால் பராமரிக்கப்படும் பயனாளிகளின் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் நபர்கள் மட்டுமே தொலை மின்னணு வாக்குப்பதிவு அல்லது VC/OAVM மூலம் நடைபெறும் AGMல் கலந்து கொள்ளவும் மற்றும் கூட்டத்தின்போது நடைபெறும் மின்னணு வாக்குப்பதிவு ஆகியவற்றில் வாக்களிக்க உரிமை பெற்றவராவார்.

திருமதி. பி.ஆர்.சுதா, பிராக்டிசிங் நிறுவன செயலாளர், (சி.பி.எண்.4468) அவர்கள் தொலை மின்னணு மற்றும் ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தின்போது நடைபெறும் மின்னணு வாக்குப்பதிவு, நேர்மையாகவும் ஒளிவு மறைவற்ற தன்மையிலும் நடைபெற ஆராய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார். AGM முடிந்து மூன்று நாட்களுக்குள் ஆராய்வாளர் தனது அறிக்கையை தலைவரிடம் சமர்ப்பிப்பார். தலைவர் அல்லது அவரால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட நபர் வாக்குப்பதிவு முடிவுகளை அறிவிப்பார். வாக்குப்பதிவு முடிவுகள் ஆராய்வாளரின் அறிக்கையுடன் நிறுவனம் மற்றும் CDSLன் இணையதளங்களில் உடனடியாக அறிவிக்கப்படும்.

கம்பெனிகள் சட்டம் 2013ன் பிரிவு 91 மற்றும் அதனுடன் இணைந்து படிக்கவேண்டிய விதிகளின்படியும் நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் 19.09.2026 முதல் 25.09.2026 (இரு நாட்களும் உட்பட) வரை, வருடாந்திர பொதுக்குழுக் கூட்டத்திற்காக மற்றும் ஈவுத்தொகையை நிர்ணயிப்பதற்கும் மூடப்பட்டிருக்கும்.

பனிரெண்டாம் ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் மெய்நிகர் முறையில் அதாவது VC/OAVMல் நடத்தப்படுவதால், பதிலிகளை நியமிக்கும் வசதி உறுப்பினர்களுக்கு இல்லை. கம்பெனியின் சட்டம் 2013ன் 103ன் பிரிவின் கீழான உறுப்பினர்களின் குறைந்தபட்ச வருகை எண்ணிக்கையானது (Quorum) ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தில் VC/OAVMன் மூலம் கலந்து கொள்ளும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கொண்டு கணக்கீடு செய்யப்படும்.

இடம் : சென்னை
தேதி : 01.09.2026

சென்னை சூப்பர் கிங்ஸ் கிரிக்கெட் லிமிடெட்டிற்காக
K.S.விஸ்வநாதன்
நிர்வாக இயக்குனர்

அம்பிகா காட்டன் மில்ஸ் லிமிடெட்

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: எண். 15/9A, வள்ளுவர் தெரு, சிவானந்தா காலனி, கோயம்புத்தூர் - 641 012.
CIN : L17115TZ1988PLC002269
Tel : (0422) 2491501/02
website: www.acmills.in, email: ambika@acmills.in

38-வது வருடாந்திர பொதுக்கூட்டம் மற்றும் மின்னணு வாக்களிப்பிற்கான தகவல் அறிவிப்பு

அன்பார்ந்த பங்குதாரர்களே,

நிறுவனத்தின் 38-வது வருடாந்திர உறுப்பினர்களின் பொதுக்குழு கூட்டம் வரும் 2026-ம் வருடம் **செப்டம்பர் 29, 2026, செவ்வாய்க்கிழமை அன்று மதியம் 12.00 மணிக்கு** நடைபெற உள்ளது. மேலும் 2026-ம் வருடம் ஆகஸ்ட் 8-ம் நாள் என தேதியிட்ட பொதுக்குழு கூட்ட அறிவிப்பிலுள்ள வணிக பரிவர்த்தனைகளுக்கான இந்த கூட்டமானது ஒளித்தோற்ற மாநாடு (Video Conferencing / VC) / பிற ஒலியுணர் காட்சி வழிமுறைகள் (Other Audio Visual Means / OAVM) எனும் நுட்ப பயன்பாட்டின் வாயிலாக நடைபெறவுள்ளது. நிறுவனங்கள் சட்டம் 2013, மற்றும் அதனை சார்ந்த விதிகள், இந்திய காப்பாவணங்கள் மற்றும் பரிமாற்று வாரியம் (SEBI) வெளியிட்டுள்ள பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள் விதிமுறைகள் 2015. இவற்றுடன் நிறுவனங்கள் விவகாரத்துறை அமைச்சகம் (MCA) மற்றும் SEBI அவ்வப்போது வெளியிடும் சுற்றிக்கைகளுக்கு உட்பட்டு இந்த கூட்டம் நடைபெறவிருக்கிறது.

மேலும், MCA/SEBI சுற்றறிக்கைகளின்படி வருடாந்திர பொதுக்குழு கூட்டத்திற்கான அறிவிப்பு (AGM Notice) / ஆண்டறிக்கை (Annual Report), **2026-ம் வருடம் ஆகஸ்ட் 21-ம் நாள்** வரை ஏற்கனவே உறுப்பினர்கள் அவரவர் டெபொசிட்டரிகளிடம் பதிவு செய்துள்ள மின்னஞ்சல் முகவரிக்கு, **2026-ம் வருடம் ஆகஸ்ட் 28-ம் தேதி** அனுப்பப்பட்டு நிறைவுபெற்றது.

2025-26 நிதியாண்டிற்கான விளக்க அறிக்கை உள்ளடக்கிய வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு, வருடாந்திர அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையத்தளமான www.acmills.in மற்றும் நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்கு பரிவர்த்தனைகளான BSE Limite மற்றும் National Stock Exchange of India Limite இணையதளங்களான www.bseindia.com மற்றும் www.nseindia.com ஆகிய இணையத்தளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

உறுப்பினர்கள் ஒளித்தோற்ற மாநாடு (Video conferencing / VC) / பிற ஒலியுணர் / காட்சி வழிமுறைகள் (Other Audio Visual / OAVM) வசதி மூலம் மட்டுமே வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளலாம். வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்பதற்கான வழிமுறைகள் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பில் (AGM Notice) வழங்கப்பட்டுள்ளது.

நிறுவனங்கள் சட்டம், 2013-ல் உள்ள பொருந்தக்கூடிய விதிகளின்படியும் மேலும் இந்திய காப்பாவணங்கள் மற்றும் பரிமாற்று வாரியம் வெளியிட்டுள்ள பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள் விதிமுறைகள் 2015-ல் உள்ள பொருந்தக்கூடிய விதிமுறைகளின்படியும், CDSL வழங்கும் தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு முறையை ("தொலை மின்னணு-வாக்களிப்பு") பயன்படுத்தி பொதுக் கூட்ட அறிவிப்பில், குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களின்மேல் உறுப்பினர்கள வாக்களிக்க வசதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு-வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்கும் வசதியையும் நிறுவனம் வழங்கியுள்ளது. தொலைநிலை மின்னணு-வாக்களிப்பு/ மின்னணு-வாக்களிப்புக்கான விரிவான நடைமுறை வருடாந்திர பொதுக்கூட்டத்தின் அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு, பட்டய கணக்காளர் **திரு. N. குழந்தைவேல்** அவர்களை வாக்களிப்பு முறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்துவதற்காக ஆய்வாளராக (Scrutiniser) நியமித்துள்ளது.

தொலைதூர மின்னணு-வாக்களிப்பு 2026-ம் வருடம் **செப்டம்பர் 26-ம் நாள் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு துவங்கி 2026-ம் வருடம் 28-ம் நாள் திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு முடியும்,** இந்த மின்னணு-வாக்களிப்பு முறையில் மேலே குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் மட்டுமே வாக்களிக்க முடியும், இந்த கால அளவிற்கு பின், CDSL வாக்களிப்பு வசதியை முடக்கி விடும்.

VC/OAVM வசதி மூலம் உறுப்பினர்கள் பொது கூட்டத்தில் கலந்துக்கொள்ளும் உறுப்பினர்கள், தொலை மின்னணு-வாக்களிப்பு முறை தீர்மானத்தில் ஏற்கனவே வாக்களிக்காமல் இருந்து மற்றும் வேறு ஏதேனும் காரணத்திற்காகவும் வாக்களிப்பில் இருந்து தடை செய்யப்படாமல் இருந்தால், கூட்டத்தின் போது நடைபெறும் மின்னணு-வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்கலாம். மேலும் ஏற்கனவே வாக்களித்த உறுப்பினர் பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்க மட்டுமே முடியும், அவரால் மீண்டும் வாக்களிக்க இயலாது.

வாக்க உரிமை தீர்மானிப்பு நாளன்று உறுப்பினர்களின் பதிவேட்டில் அல்லது டெபொசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயனீட்டாளர்கள் (Beneficial Owners) பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட நபர்களுக்கு மட்டும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் தொலை மின்னணு-வாக்களிப்பு அல்லது கூட்டத்தின் போது மின்னணு மூலம் வாக்களிக்கும் வசதியைப் பெற உரிமை உண்டு. உறுப்பினர்களின் வாக்குரிமை விகிதம் **2026-ம் வருடம் செவ்வாய்க்கிழமை , செப்டம்பர் 22-ம் தேதியன்று** (Cut off Date) நிறுவனத்தின் ஒட்டுமொத்த செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்திற்கு உறுப்பினர் அவரவர் வைத்திருக்கும் பங்கின் விகிதாச்சார அடிப்படையில் இருக்கும்.

மின்னணு முறையில் பொது கூட்ட அறிவிப்பை அனுப்பிய பின்னர் நிறுவனத்தின் பங்குகளைப் பெற்று வாக்களிக்கும் உரிமம் தீர்மானிக்கப்படும் நாளன்று நிறுவனத்தின் உறுப்பினராகி பங்குகளை வைத்திருக்கும் எந்தவொரு நபரும் helpdesk.evoting@cdslindia.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கையை அனுப்புவதன் மூலம் உள்நுழைவு பெயர் மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம். இருப்பினும், அத்தகைய உறுப்பினர்கள் ஏற்கனவே தொலைதூர மின்னணு வாக்களிப்பிற்காக CDSL - இடம் பதிவு செய்திருந்தால், அவர்கள் இப்பொழுது வாக்களிக்க தங்களிடம் ஏற்கனவே இருக்கும் உள்நுழைவு பெயர் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தலாம்.

பங்குதாரர்களின் மின்னஞ்சல் முகவரி ஏற்கனவே நிறுவனம் / அதன் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் RTA/ டெபொசிட்டரிகளிடம் பதிவு செய்யப்பட்டிருந்தால், மின்னணு வாக்களிப்பிற்கான விவரங்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட பங்குதாரரின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும். பங்குகளை காகித வடிவில் வைத்திருப்போர் அல்லது தங்கள் மின்னஞ்சல் முகவரியை ஏற்கனவே பதிவு செய்யாதவர்கள், ஆண்டு பொதுக்குழு கூட்ட தீர்மானங்களின் மேல் தங்கள் வாக்குகளை தொலைதூர மின்னணு வாக்களிப்பு அல்லது கூட்டத்தின் சமயத்தில் நடைபெறும் மின்னணு வாக்களிப்பு ஆகியவற்றின் வாயிலாக செலுத்த கீழ் கண்ட விதிமுறைகளை பின்பற்றவும்.

அ. டிமாட் முறையில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் தங்களின் டிபாசிட்டரி பங்கேற்பாளரை ("DP"), தொடர்பு கொள்ளவும், தங்களின் DP அறிவுறுத்தும் செயல்முறையின் படி தங்கள் மின்னஞ்சல் முகவரியை டிமேட் கணக்கில் பதிவு செய்யவும்.

ஆ. பங்குகளை காகித வடிவில் வைத்திருப்போர், அதற்கென உள்ள படிவம், ஐஎஸ்ஆர்-1 மற்றும் பொருத்தமான படிவங்களில் விபரங்களை பூர்த்தி செய்து, நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர் ("RTA"), MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்க்கு helpdesk.evoting@cdslindia.com என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொண்டு பதிவு செய்ய வேண்டும், இதற்கு தேவையான படிவங்களை www.acmills.in என்ற நிறுவனத்தின் இணையத்தளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்யலாம்.

தொலைநிலை மின்னணு-வாக்களிப்பு தொடர்பான ஏதேனும் கேள்விகள் உங்களிடம் இருந்தால், 18002109911 எனும் கட்டணமில்லா எண்ணைத் தொடர்பு கொள்ளவும் அல்லது CDSL -ன் மூத்த மேலாளர், Mr. Rakesh Dalvi, அவர்களை helpdesk.evoting@cdslindia.com என்னும் மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

இந்த அறிவிப்பை நிறுவனத்தின் இணையத்தளமான www.acmills.in என்ற முகவரியிலும் மற்றும் நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்கு பரிவர்த்தனை நிறுவனங்களான BSE Limited மற்றும் National Stock Exchange of India Limited -ன் இணையதளங்களான www.bseindia.com மற்றும் www.nseindia.com ஆகியவற்றில் காணப்பெறலாம்.

நிறுவனத்தின் உறுப்பினர்களின் பதிவு மற்றும் பங்கு பரிமாற்ற பதிவேடுகள் **2026-ம் வருடம் செப்டம்பர் மாதம் 23-ம் நாள் புதன் கிழமை முதல் 2026-ம் வருடம் செப்டம்பர் மாதம் 29-ம் தேதி செவ்வாய்க்கிழமை** வரை (குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நாட்களையும் சேர்த்து) உறுப்பினர் பொதுக்குழு கூட்டம் மற்றும் ஈவுத்தொகை செலுத்துதலுக்காக மூடப்படும் என அறிவிக்கப்படுகிறது. 2025-26ம் ஆண்டிற்கான ஈவுத்தொகை, உறுப்பினர் பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டால், **2026-ம் வருடம் செப்டம்பர் மாதம் 22-ம் நாள் செவ்வாய்க்கிழமை** அன்று வணிக நேரத்தின் முடிவில் டெபாசிட்டரிகளால் வழங்கப்பட்ட உறுப்பினர்கள் பதிவேட்டின் விவரங்களின்படி உறுப்பினர்கள் மற்றும் பங்குகளின் பயனீட்டாளர்களுக்கு ("Beneficial owner") வழங்கப்படும்.

இடம் : கோயம்புத்தூர்
தேதி : 31.08.2026

அம்பிகா காட்டன் மில்ஸ் லிமிடெட்
பி.வி. சந்திரன்
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்
DIN: 00628479



உடனடிச் செய்திகள்
சூடாக சுருக்கமாக...
www.dinamani.com